திரு. ஜே. எஸ். இராசு : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி முதல்வர்கள் தேவைப்படுகின்ற பட்டப் படிப்பைப் பற்றி பல்கலைக் கழகத்திற்கு எழுதினால்தான், அது கவனிக்கப்பட்டு ஆவன செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். சில கல்லூரிகளில் முதல்வர்கள் ஒருகால் ஆர்வம் காட்டாமல் இருந்து, பொது மக்களுடைய பிரதிநிதி கள், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், அல்லது ஒன்றி யத் தலைவர்கள் போன்ற மற்றவர்கள் அதைப் பல்கலைக் கழ கத்திற்குத் தெரிவித்தால், அதைக் கவனிக்குமாறு பல்கலைக் கழகம் அறிவுறுத்தப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பல்கலைக் கழகம் அட்டா னமஸ் பாடி அல்லவா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலை வர் அவர்களே, அரசாங்கம் என்ன செய்வது என்பதை நாம் பேசுவதற்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் குறைபாடுகளைப் போக்கவேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் அந்தக் கல்லூரிக்கும் எந்த அளவுக்குத் தொடர் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் களுக்கும் அந்தக் கல்லூரி முதல்வர்களுக்கும் என்ன தொடர்பு இருக்கின்றது என்பதைப் பற்றி நான் தெரிந்து கொள்ள விரும்பு கிறேன். அவர்கள் கல்லூரி தலைவர்களோடு தொடர்பு கொண்டு, இன்னின்ன வகுப்புகளைத் துவக்கலாம் என்று பேசி அங்கேயே அதற்கான முயற்சிகளை நேரடியாக மேற்கொள்ள லாம்.

தர்மபுரி அரசு கலைக் கல்லூரியில் பட்டமேற்படிப்பு வகுப்புகள்.

*வினா எண். 3—திரு. எஸ். அரங்கநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தர்மபுரி அரசு கலைக் கல்லூரியில் எம்.ஏ., எம்.எஸ்.ஸி. வகுப்புகள் தொடங்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், 1980–81-ம் ஆண்டிலேயே தொடங்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

1981 ஜனவரி 23]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 1980–81 ம் ஆண்டில் தருமபுரி அரசு கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் ஏதும் தொடங்கப்படவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

அரியலூர் அரசினர் கலைக் கல்லூரி.

*வினா எண். 4—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அரியலூர் அரசினர் கலைக்கல்லூரியில் பி.காம். மற்றும் எம். ஏ. படிப்புகளுக்கான வகுப்புகள் தொடங்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எந்தக் கல்வியாண்டில் இருந்து இந்த வகுப்புகள் தொடங்கப் பெறும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரியலூர் அரசினர் கல்லூரி மாணவர் விடுதியில் அரிசன மாணவர்களுக்கும், ஜாதி இந்து மாணவர்களுக்கும் இடையே ஏற்பட்ட கலவரத்தில், அரிசன மாணவர்களுக்கு இந்த அரசாங்கம் என்ன பாதுகாப்பு கொடுத்தது என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் அரசினர் கலைக் கல்லூரி ஆரம்பிக்கப் பட்டு 15 ஆண்டுகள் ஆகியும், இந்த ஆண்டும் பி.காம். மற்றும் எம்.ஏ. பட்டப்படிப்புகள் இடம் பெறவில்லை. நான் அந்தக் கல்லூரி முதல்வரைச் சந்தித்து, அந்தப் பகுதி பின்தங்கிய பகுதி என்றும், மேலும் 50 மைல் சுற்றளவுக்கு அந்தப் பகுதியில் இந்த பி.காம்., எம்.ஏ. வகுப்புகள் இல்லை என்றும் சொல்லி யிருக்கிறேன். இந்த ஆண்டாவது அந்தப் படிப்புகளை ஆரம் பிக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.